மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதற்காக மணவாளன் தலைமையில் குழு இருக்கிறது. அதற்கு உடன் வேலை செய்ய வேண்டிய பொறுப்பை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடம் ஒப்படைத்திருக்கிறோம். அது உள்ளாட்சித் துறை செயலாளர் மூலமாகச் செயல்பட நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

(4) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள் குறித்து மேற்கொண்டு எனக்கு ஒரு முடிவு தெரிவதற்காகக் கூறுகிறேன். இன்றைக்கு இந்த விவாதம் முடியவில்லையென்றால் நாளைக்கு இதை எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கும். முதல் அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது கட்சித் தலைவர்கள், அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்திற்கு வர முடியாது போகலாம் என்றுதான் இன்று காலை கூடுவதாக இருந்த அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தையும் தள்ளி வைத்தேன். விவாதம் தொடர்ந்து நடைபெறுவதால் அலுவல் ஆய்வுக் குழுவை கூட்டுகின்ற வாய்ப்பு இல்லை, எனவே இந்த அவையிலேயே அது பற்றி ஒரு முடிவு எடுப்பது நல்லது. இன்றைக்கு இந்த விவாதம் முடியவில்லையென்றால் நாளைக்கும் இதனை எடுத்துக் கொள்வது என்றும், நாளை எடுத்துக் கொள்வதாக உள்ள அலுவல்கள் 7, 8 ஆம் தேதிகளில் எடுத்துக் கொள்வது என முடிவு செய்யலாமா என்பதை அவை முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : யோசனை என்ற பெயரால் தங்களது கவனத்திற்கு நான் வைக்க விரும்புகிறேன். நாளை உங்களுக்குத் தெரியும். நீதிபதி இஸ்மாயில் பிரதம நீதிபதியாக பதவி ஏற்கின்ற விழாவில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருக்கிற காரணத்தால் அந்த விழா 11 மணிக்கு நடைபெறுவதால் அந்த விழாவிலே பங்குபெற்றதற்குப் பிறகு 11.30 மணிக்கு திருப்பி அவை கூடி இந்த விவாதத்தைத் தொடங்குவது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒன்னரை மணிக்குள் முடித்து விடலாம். நாளைக்கு, அவை ஏற்றுக்கொண்டால், கேள்வி நேரத்தைக்கூட தவிர்க்கலாம்.

[1979 நவம்பர் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 9 என்று இல்லாமல் 10 மணிக்கு அவை கூடுகிற போது எல்லாம் நாம் கேள்வி நேரத்தை தவிர்ப்பது உண்டு. 11.30 மணிக்குக் கூடி 1.30 மணி வரை நடப்பது என்றால் இரண்டு மணி நேரத்திலே விவாதத்தைத் தொடர்ந்து முடித்துவிடலாம். பிறகு 7, 8 ஆம் தேதிகளில் இன்றைக்கும் நாளைக்கும் இருந்த அலுவல்களை முடித்துவிடலாம், அதாவது சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றி விடலாம் என்பது என்னுடைய சொந்தக் கருத்து. ஆகவே அன்று $1\frac{1}{2}$ மணிக்கு முடித்துவிட வேண்டும் என்பது இந்த அவையினுடைய முடிவு என்று கருதுகிறேன்.

திரு. க. சுப்பு : சட்ட முன்வடிவுகளுக்கு அதிக நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு அலுவல் ஆய்வுக்குழுவை கூட்ட முடியாத நிலைமை இருந்ததால் கூட்ட முடியவில்லை. 7-ம் தேதி சட்ட முடிவுகளை எடுத்துக்கொள்கிற போது தேவையிருந்தால் அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தைக் கூட்டுகிறேன். அதிலே முடிவு எடுக்கத் தயார். ஆகவே நாளை காலை 11.30 மணிக்கு சபை கூடும். நாளைக்குக் கேள்வி நேரம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–10]

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று (5–11–1979) பகல் சுமார் 11-40 மணிக்கு பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை திரு. பெரியகருப்பன் அவர்கள் மகன் திரு. ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்பவர் பேரவையில் வீசியுள்ளார். அவர் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்டின்) காவலில் இருக்கிறார். அவரது செய்கை அவை உரிமை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் ர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

(8) அரசினர் தீர்மானங்கள்.

(அ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, உங்களது அனுமதியோடு கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.